
தேவ
நதியினால்
நீர்ப்பாய்ச்சுகிறீர்

Song 6 தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்

Psalm 64 (Hear my voice, O God, in my complaint; preserve my life from dread of the enemy. Hide me from the secret plots of the wicked… But God shoots His arrow at them; they are wounded suddenly. They are brought to ruin… The righteous will rejoice in the Lord and take refuge in Him.)

தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே

KJC-DNN

வருஷங்களை நன்மையால் முடி சூட்டுகிறீர்
உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது
வனாந்தர தாபரங்களிலும் பொழிகின்றீர்
மேடுகளைச் சுற்றிலும் பூரிப்பாக்குகிறீர்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகளை நிறைத்தீர்
பள்ளத்தாக்கை தானியத்தால் மூடியிருக்க செய்தீர்
படைச்சால்களுக்குத் தண்ணீரை இறைத்தீர்
அதை மழைகளால் கரையப் பண்ணினீர்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

சமுத்திரங்களின் மும்முரத்தை அமர்த்துகிறீர்
அலைகளின் இரைச்சலையும் அமர்த்துகிறீர்
ஜனங்களின் அமளியை அமர்த்துகிறீர்
காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

KJC-DNN

பயங்கரமான காரியங்களைச் செய்கின்றீர்
எங்களுக்கு நீதியுள்ள உத்தரவை அருளுகிறீர்
எல்லாரும் நம்பும் நம்பிக்கையான எங்கள் இரட்சகரே
உமது வீட்டின் நன்மையால் திருப்த்தியாவோம்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்
ஜெபத்தைக் கேட்கிறவரே உம்மைத் துதிப்பேன்
அக்கிரமத்தை என்மேலிருந்து கழுவி எடுத்திடும்

தேவனே என் பாவங்களை நிவர்த்தியாக்கிடும்

எல்லாமே உம்மாலே எல்லாமே உம்மாலே
உம்மாலே எல்லாமே உருவானதே எங்கள் கர்த்தரே
தேவநதியினால் நீர்ப்பாய்ச்சுகிறீர்
பூமியை விசாரித்து செழிப்பாக்குகிறீர்
தானியத்தையெல்லாம் விளைவிக்கிறீர்
பயிர்களை ஆசீர்வதிக்கிறீர்

KJC-DNN

